[*2019 பிப்ரவரி 14*

கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

கால்நடை மருத்துவமனை

***801—திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், பேர்பெரியான்குப்பம் ஊராட்சியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், பேர்பெரியான்குப்பம் ஊராட்சியில் 2017 ஆம் ஆண்டுவரை கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வந்தது. அரசாணை எண் 2, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள்: 4-1-2017-ன்படி, அந்தக் கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அரசு விதிகளின்படி, ஒரு கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட, தினந்தோறும் சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும்மேல் இருத்தல் வேண்டும். உள் நோயாளிப் பிரிவு, ஊடுகதிர் கருவி நிறுவுதல் போன்ற வசதிகளை உருவாக்குவதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும். தற்போது இம்மருந்தகத்தில், தினமும் சுமார்

2019 பிப்ரவரி 14]

30 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, இந்தக் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், பேர்பெரியான்குப்பம் கால்நடை மருந்தகத்திற்கு, 32 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில், நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியுதவியுடன் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், பேர்பெரியான்குப்பத்தில் கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் 2017 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த மருந்தகம் பேர்பெரியான்குப்பம் ஊராட்சி, வீரசிங்கன்குப்பம் மற்றும் காங்கேயன்குப்பம் ஊராட்சிகள் மற்றும் காட்டுக்கூடலூர் ஊராட்சியிலுள்ள கால்நடைகளுக்கு சேவையாற்றி வருகிறது. இந்தப் பகுதிகளில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளும், கோழிகளும் வளர்க்கப்படுகின்றன. இந்தப் பகுதிகளில் செல்லப் பிராணிகளும் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில் இந்தக் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துகின்றபோது* X-ray, scan *வசதிகள் செய்து தருவதற்கும், அனுபவமிக்க மருத்துவர்களை நியமிப்பதற்கும் வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அந்தப் பகுதி மக்கள், அதை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். பக்கத்திலுள்ள நெய்வேலியிலும் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. அப்பகுதியில்* pet animals *அதிகமாக வளர்க்கப்படுகின்றன. செல்லப் பிராணிகளை தனியார் மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்கு அழைத்துச் செல்வதற்கு அதிகம் செலவாகிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும். எனவே, இதைக் கருத்திற்கொண்டு, பேர்பெரியான்குப்பத்தில் உள்ள கால்நடை மருந்தகம் அல்லது நெய்வேலியிலுள்ள கால்நடை மருந்தகம்*

இவற்றில் ஏதாவது ஒன்றை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதால், scan வசதி, X-ray வசதி மற்றும் பிற வசதிகள் எல்லாம் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சொன்னார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இணையாக கால்நடை மருந்தகங்களில் ஏற்கெனவே, X-ray பிரிவு, scan வசதிகள், ambulance வசதி போன்ற எல்லா வசதிகளும் இருக்கின்றன என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கோரியுள்ளார்கள். நெய்வேலி தொகுதியில், 42 ஆயிரம் மாட்டினங்கள், 45 ஆயிரம் ஆட்டினங்கள் மற்றும் 1 இலட்சம் கோழியினங்கள் உள்ளன. இவற்றிற்குத் தேவையான அனைத்து சேவைகளையும் வழங்கிட, 6 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 2 கால்நடை கிளை நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பேர்பெரியான்குப்பம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனையை அமைக்க வேண்டியுள்ளார்கள். தற்போது, அம்மருந்தகத்தில் தினமும் சுமார் 30 கால்நடைகள் மட்டுமே சிகிச்சை பெற்று வருகின்றன. வருங்காலங்களில் இம்மருந்தகத்திற்கு சிகிச்சை பெற வரும் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அரசினுடைய கொள்கை முடிவிற்குட்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான், கால்நடை மருத்துவர்களை அதிகளவில் நியமித்துள்ளது. அதாவது,

2019 பிப்ரவரி 14]

880 மருத்துவர்களை நியமனம் செய்துள்ளது என்பதை முதலிலே பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், நெய்வேலி கால்நடை மருந்தகமானது நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தால் வழங்கப்பட்ட வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மருந்தகத்தில் தினமும் சுமார் 30 முதல் 40 கால்நடைகள், குறிப்பாக செல்லப் பிராணிகள் அதிகளவில் சிகிச்சை பெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறைந்தபட்சம் 20 cent *நிலத்தை துறைக்கு இலவசமாக வழங்கும்பட்சத்தில், பேர்பெரியான்குப்பம் கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட, அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரமுயர்த்தித் தருவதாகக் கூறியிருப்பதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைப் பொறுத்தவரையில் அங்கே தனியார்களிடம் இடம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் அவர்களை வலியுறுத்தி, இதற்கான நிலத்தை என்னால் பெற்றுத் தர முடியும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, பேர்பெரியான்குப்பம் ஊராட்சி காடாம்புலியூரில் கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடம் காலியாக இருக்கிறது. அதை நிரப்பித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். நெய்வேலி தொகுதியிலுள்ள குறிஞ்சிப்பாடி வட்டத்திலுள்ள வடக்குமேலூர், கீழூர், சம்மட்டிகுப்பம் போன்ற பகுதிகளுக்குக் கால்நடை கிளை நிலையங்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பண்ருட்டி வட்டத்திலுள்ள விசூர், கீழ்மாம்பட்டு ஊராட்சிகளில் கால்நடை கிளை நிலையங்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆண்டு, உதவி மருத்துவர்களைத் தற்காலிகமாக நியமித்திருக்கிறீர்கள். அவர்களுக்கான ஊதியத்தைப் பெற்றுத் தர துறையின்மூலம் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல், காடாம்புலியூர், மருங்கூர், பத்திரக்கோட்டை போன்ற மருந்தகங்களுக்கு சுற்றுச்சுவரும், மருங்கூர் மருந்தகத்திற்குத் தண்ணீர் வசதியும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடலூர் மாவட்டம் எப்போதுமே பேரிடர் பாதிக்கின்ற மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால், பேரிடர் பாதிக்கின்ற காலங்களில் கால்நடைகளைப் பாதுகாக்கின்ற வகையில், ஒரு கால்நடை பாதுகாப்பு மையத்தை துறையின் மூலமாக முன்பே தேர்வு செய்து வைத்திருந்தால் நலமாக இருக்கும் என்ற ஆலோசனையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, இதற்கு நடவடிக்கை எடுத்து, துறையின்மூலம் சரி செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், இன்றைக்கு கால்நடை பராமரிப்புத் துறையிலே பல்வேறு மாற்றங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், நேற்றைக்குக்கூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே அரசை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சேலம் மாவட்டத்தில் 496 கோடி ரூபாய் செலவில் ஆசியாவிலேயே மிகப் பெரிய கால்நடை பூங்கா ஒன்று அமைக்கப்படும் என்ற நற்செய்தியைச்

2019 பிப்ரவரி 14]

சொல்லியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கால்நடை பூங்காவைப் பொறுத்தவரையில் அருகில் இருக்கின்ற மாவட்டங்கள் மட்டுமல்லாது, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் வகையில் அவர்கள் அங்கே சென்று என்னென்ன பணிகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் அறிந்துகொள்ளும் வகையில் அங்கே ஓர் ஆராய்ச்சி மையமும் ஏற்பட இருக்கின்றது என்ற நல்ல செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெய்வேலி தொகுதியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார். அவர் பட்டியலிட்டிருக்கின்ற பகுதிகளில் எங்கெல்லாம் கால்நடை கிளை நிலையம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் கால்நடை பராமரிப்புத் துறையினுடைய அதிகாரி பெருமக்களை அனுப்பி வைத்து, கால்நடை கிளை நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும். அதேபோல, மருந்தகங்களுக்குச் சுற்றுச்சுவர் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். எந்தெந்த மருந்தகங்களுக்கு வேண்டுமென்று ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.*

திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களுடைய நெஞ்சங்களிலும், இல்லங்களிலும் வாழ்ந்து, மறைந்து, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே நல்லாட்சி நடத்தி வரும், நாடு போற்றும் பெருமைக்குச் சொந்தக்காரர், ஏழையெளிய மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரம், விவசாயிகளின் விடிவெள்ளி, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுக்கு தமிழக மக்களுக்கு பொங்கல் பரிசுடன் ரூபாய் 1,000/- கொடுத்து, அனைத்து மக்களையும் மனங்குளிர வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக*

முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். எனக்கு துணைக் கேள்வி கேட்க அனுமதி வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் எனது கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்கு மூன்று கால்நடை கிளை நிலையங்களையும், இரண்டு கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகவும் தரமுயர்த்திக் கொடுத்த மாண்புமிகு துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட தலைவாசல் ஒன்றியத்தில் கிழக்கு இராஜாபாளையம், லத்துவாடி, திட்டச்சேரி, காவர்பனை ஆகிய கிராமங்கள் உள்ளன. மேற்படி கிராமங்களில் சுமார் 12 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அங்கே சுமார் 5,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. கால்நடைகளுக்கு வைத்தியம் பார்க்க வேண்டுமென்றால் 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வீரகனூருக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதனால், மேற்படி கிராம மக்களும், விவசாயிகளும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, மேற்படி அந்த 4 ஊராட்சிகளும் பயன்பெறும் வகையில், கிழக்கு இராஜாபாளையத்தில் ஒரு கால்நடை கிளை நிலையத்தை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதியில் 5,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு கடந்த ஆண்டுகளில் 125 கால்நடை

கிளை நிலையங்களை அமைத்து, இதுகாறும் இல்லாத அளவிற்கு சரித்திர சாதனையைப் படைத்திருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கடந்த ஆண்டு மூன்று கால்நடை கிளை நிலையங்களை அவருடைய தொகுதிக்கு அமைத்துக் கொடுத்ததாகச் சொன்னார்கள். இன்றைக்கு, அவருடைய தொகுதியிலே வருகின்ற வேறோர் ஊராட்சிப் பகுதிக்கும் ஒரு கால்நடை கிளை நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். துறை அதிகாரிகளை அங்கே அனுப்பி ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவைப்படுமாயின், அங்கே கால்நடை கிளை நிலையம் அமைப்பது பற்றி பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம் அவர்கள்.

திரு. கி. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தினந்தோறும் விதி 110-ன்கீழ், வறிய மக்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய வள்ளல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன். எனது சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி பேரூராட்சி, தாதம்பட்டி ஊராட்சியில் அமைந்திருக்கின்ற கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தந்த மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்கான சிறப்பு ஆணையைப் பெற்றுத் தந்திருக்கின்றது. அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் 5,000-க்கும் மேற்பட்ட ஜல்லிக்கட்டுக் காளைகளையும், கால்நடைகளையும் அதிகமாக வளர்த்து வருகின்ற காரணத்தினால், அலங்காநல்லூரில் அமைந்திருக்கின்ற அந்தக் கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர

வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான ஒன்றேகால் ஏக்கர் நிலம் அங்கேயே இருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அலங்காநல்லூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டுக்கு பெயர்பெற்ற ஊராக அலங்காநல்லூர் இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜல்லிக்கட்டினை, அங்கேயே வந்து தொடங்கி வைத்து ஒரு சாதனையைப் படைத்திருக்கின்றார்கள் என்பதையும் முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட அலங்காநல்லூருக்கு கால்நடை மருத்துவமனை அமைப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

ஆரம்ப சுகாதார நிலையம்

***14605—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை தொகுதி, சீனாபுரம் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*